**ENTRANCE EXAMINATION FOR ADMISSION, MAY 2011.**

**M.Phil./Ph.D. (TAMIL)**

**COURSE CODE : 257/125**

Register Number :

*Signature of the Invigilator*
*(with date)*

---

COURSE CODE : 257/125

Time : 2 Hours

Max : 400 Marks

*Instructions to Candidates :*

1. Write your Register Number within the box provided on the top of this page and fill in the page 1 of the answer sheet using pen.
2. Do not write your name anywhere in this booklet or answer sheet. Violation of this entails disqualification.
3. Read each question carefully and shade the relevant answer (A) or (B) or (C) or (D) in the relevant box of the ANSWER SHEET using HB pencil.
4. Avoid blind guessing. A wrong answer will fetch you –1 mark and the correct answer will fetch 4 marks.
5. Do not write anything in the question paper. Use the white sheets attached at the end for rough works.
6. Do not open the question paper until the start signal is given.
7. Do not attempt to answer after stop signal is given. Any such attempt will disqualify your candidature.
8. On stop signal, keep the question paper and the answer sheet on your table and wait for the invigilator to collect them.
9. Use of Calculators, Tables, etc. are prohibited.

1. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் பெயர்

(A) நலங்கிள்ளி (B) பாரி

(C) நெடுஞ்செழியன் (D) செங்குட்டுவன்

2. நல்லியக்கோடனைப் புகழும் நூலின் பெயர்

(A) கூத்தராற்றுப்படை (B) பொருநராற்றுப்படை

(C) சிறுபாணாற்றுப்படை (D) பெரும்பாணாற்றுப்படை

3. மதுரைக் காஞ்சி என்ற நூலை எழுதியவர்

(A) உருத்திரங்கண்ணனார் (B) கூலவாணிகன் சாத்தன்

(C) பெருங்கௌசிகனார் (D) மாங்குடி மருதனார்

4. அதியமானிடம் தூதுவராகச் சென்ற புலவர் பெயர்

(A) பரணர் (B) நத்தத்தனார்

(C) ஔவையார் (D) முடத்தாமக்கண்ணியார்

5. புலவராற்றுப்படை எனப் புகழப் பெறும் நூல்

(A) திருமுருகாற்றுப்படை (B) மலைபடுகடாம்

(C) குறிஞ்சிப்பாட்டு (D) பொருநர் ஆற்றுப்படை

6. "கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்றே" - இடம்பெறும் நூல்

(A) பரிபாடல் (B) புறநானூறு

(C) பதிற்றுப்பத்து (D) நெடுநல்வாடை

7. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட பாக்கள் உள்ள நூல்

(A) குறுந்தொகை (B) ஐங்குறுநூறு

(C) நற்றிணை (D) அகநானூறு

8. "கொங்குதேர் வாழ்க்கை" எனத் தொடங்கும் பாடலமையும் நூல்

(A) ஐங்குறுநூறு (B) அகநானூறு (C) குறுந்தொகை (D) கலித்தொகை

9. 'கள்வன் பத்து' என்ற பகுதி இடம்பெறும் நூலின் பெயர்

(A) ஐங்குறுநூறு (B) பதிற்றுப்பத்து (C) மதுரைக்காஞ்சி (D) மலைபடுகடாம்

10. தொடித்தலை விழுத்தண்டினார் என்ற பெயர் எதனாலமைந்தது?

(A) ஊரின் பெயரால் (B) உறுப்பின் பெயரால்

(C) தொடரின் வழியால் (D) இயற்பெயர் என்பதால்

11. பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தின் ஆசிரியர் பெயர்

(A) குமட்டூர்க் கண்ணனார் (B) நச்செள்ளையார்

(C) பரணர் (D) கபிலர்

12. 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' எனப் புகழும் நூல்

(A) ஐங்குறுநூறு (B) கலித்தொகை (C) புறநானூறு (D) நற்றிணை

13. காமம் மிக்க கழிபடர் களவியால் தோன்றும் சிற்றிலக்கிய வகை

(A) உலா (B) கோவை (C) பரணி (D) தூது

14. அந்தாதி சிற்றிலக்கியத்தில் இடம் பெறும் உறுப்பு

(A) தூது (B) கலம்பகம் (C) தவம் (D) கோவை

15. தமிழ் வரலாற்றில் ஒன்பது பிள்ளைத்தமிழ் நூல்களைப் பாடி சிறப்பிடம் பெற்றவர்

(A) குமரகுருபரர் (B) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(C) அழகிய சொக்கநாதர் (D) எவருமில்லை

16. கலம்பகம் அரசர்களுக்காக பாடினால் எத்தனை பாடல்கள் பாட வேண்டும்?

(A) 100 (B) 95 (C) 90 (D) 30

17. இறப்பு நிகழ் வெதிர் வென்னும்முக் காலமும் திறம்பட உரைப்பது

(A) பள்ளுப்பாட்டு (B) குறத்திப்பாட்டு (C) ஊசல்பாட்டு (D) எதுவுமில்லை

18. திரிகூடராசப்பக் கவிராயர் பிறந்த ஊர்

(A) மேலகரம் (B) திரிகூடமலை (C) திருக்குற்றாலம் (D) திருநெல்வேலி

19. 'கோவை' - எந்தப் பாவகையால் பாடப்பெறுகிறது?

(A) கலிவெண்பா (B) அகவல்

(C) கட்டளை கலித்துறை (D) விருத்தம்

20. முன்னெழு நிலை, பின்னேழு நிலை என இரு கூறாகப் பருக்கப் பெற்றுப் பாடும் இலக்கியம்

(A) உலா (B) பரணி (C) கலம்பகம் (D) அந்தாதி

21. ‘விளையும் ஒரு பொருள் மேலொரு நூறு தழைய அரைத்தல்’ என்பது எந்தச் சிற்றிலக்கிய வகையை குறிக்கிறது

(A) அந்தாதி (B) ஆற்றுப்படை (C) ஊசல் (D) சதகம்

22. முதல் பிள்ளைத் தமிழைப் பாடியவர்

(A) ஒட்டக்கூத்தர் (B) பெரியாழ்வார்

(C) மீனாட்சி சுந்தரம்பிள்ளை (D) எவருமில்லை

23. மாணாக்கராற்றுப்படை பாடியவர்

(A) வேங்கடாசலம் பிள்ளை (B) நாராணயசாமி

(C) கச்சியப்ப முனிவர் (D) எவருமில்லை

24. சேரமான் பெருமாள் நாயனார் பாடிய நூல்

(A) சிவபெருமான் திருவந்தாதி (B) பொன்வண்ணத் தந்தாதி

(C) கயிலையந்தாதி (D) எதுவுமில்லை

25. இலக்கிய உலகம் படைக்குந்திறன், சுவைக்குந்திறன், திறனாயுந்திறன் ஆகிய மூன்று தனித்த திறங்களை உடையதாகும் என்று ஆபர்குரோம்பி குறிப்பிடும் நூல்

(A) இலக்கியத் திறனாய்வு கொள்கைகள் (Principle of Literary Criticism)

(B) இலக்கியத் திறனாய்வு (Literary Criticism)

(C) பின்னை நவீனத்துவ கோட்பாடு (Post Modern Theory)

(D) எதுவும் இல்லை (None of the above)

26. புதுத்திறனாய்வின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

(A) ஆபர்குரோம்பி (B) ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் (C) யூங் (D) ஃப்ராய்ட்

27. ‘கம்பராமாயண ஆராய்ச்சி’ என்ற ஆய்வு நூலை எழுதியவர் யார்?

(A) உ.வே. சாமிநாதையர் (B) வ.வே.சு. ஐயர்

(C) ச.வே. சுப்பிரமணியன் (D) எவருமில்லை

28. நனவோடையின் மற்றொரு இயல்பு

(A) அழகியல் (B) படிமவியல் (C) தொன்மவியல் (D) குறியீட்டியல்

29. ரெனி வெல்லாக்கும், ஆஸ்டின் வாரனும் எழுதிய ‘இலக்கியக் கொள்கை’ என்ற ஆங்கில நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

(A) குளோரியா சுந்தரமதி (B) அ.அ. மணவாளன்

(C) க. கைலாசபதி (D) வ.சுப. மாணிக்கம்

30. இலக்கியக் கொள்கையை (Literary Theory) உருவாக்கத் தேவைப்படும் திறனாய்வுகள்

(A) இலக்கியத் திறனாய்வும் தொன்மத் திறனாய்வும்

(B) இலக்கியத் திறனாய்வும் இலக்கிய வரலாறும்

(C) இலக்கியத் திறனாய்வும் சமுதாயத் திறனாய்வும்

(D) இலக்கியத் திறனாய்வும் அறிவியல் திறனாய்வும்

31. 'Criticism' என்ற சொல்லை ஒரு கலைச் சொல்லாக முதலில் பயன்படுத்தியவர்

(A) ரெனி வெல்லாக்கு

(B) ஃபிரான்சிஸ் பேக்கன்

(C) ஜான் டிரைடன்

(D) ஆஸ்டின் வாரன்

32. 'Criticism' என்ற சொல்லுக்கு இணையாக 'விமரிசனம்' என்ற சொல்லை முதன்முதல் தமிழில் பயன்படுத்தியவர்

(A) க. கைலாசபதி

(B) தொ.மு.சி. ரகுநாதன்

(C) க.நா. சுப்பிரமணியம்

(D) ஆ. முத்துசிவன்

33. 'கவிஞனின் வேலை, வெளிப்பட்டுக் கிடப்பவற்றை உள்ளே மறைத்து வைப்பது; திறனாய்வின் வேலை, மறைந்து கிடப்பவற்றை 'வெளிப்படுத்திக் காட்டுவது' என்று கூறிய உளவியல் திறனாய்வாளர்

(A) நார்த்ரோப் ஃபிராய்

(B) ஜேக்கு டெர்ரிடா

(C) கார்லல் குஸ்தவ் யூங்

(D) சிக்மண்ட் ஃபிராய்ட்

34. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை எழுதிய நூல்

(A) வீரயுகப் பாடல்கள்

(B) காவிய காலம்

(C) இரட்டைக் காப்பியங்கள்

(D) திருவள்ளுவமாலை

35. 'கம்பனும் மில்ட்டனும் ஒரு புதிய பார்வை' என்ற ஒப்பிலக்கியத் திறனாய்வு நூலை எழுதியவர்

(A) அ. அ. மணவாளன்

(B) எஸ். வையாபுரிப்பிள்ளை

(C) எஸ். ராமகிருஷ்ணன்

(D) க. கைலாசபதி

36. மேலை நாடுகளில் அழகியல் திறனாய்வுக்குக் கோட்பாட்டளவிலான முன்னோடியானவர்

(A) இம்மானுவேல் காண்ட்

(B) எட்கார் ஆலன் போ

(C) ரசிகமணி டி.கே.சி.

(D) பி.ஸ்ரீ.

37. கந்தபுராணத்தை எழுதியவர் யார்?

(A) கச்சியப்பர் (B) பரஞ்சோதி (C) குமரகுருபரர் (D) சேக்கிழார்

38. இறைவன் காளியுடன் நடனமாடிய தலம் எது?

(A) தில்லை

(B) மதுரை

(C) திருவாலங்காடு

(D) திருச்செங்கோடு

39. அருணகிரிநாதர் வாழ்வில் திருப்பம் ஏற்படக் காரணமாக இருந்த தலம் எது?

(A) திருப்பரங்குன்றம் (B) திருவண்ணாமலை

(C) பழனிமலை (D) சுவாமிமலை

40. உமாபதிசிவம் கொடிக்கவி பாடிக் கொடியேற வைத்த தலம் எது?

(A) சிதம்பரம் (B) திருப்பனந்தாள்

(C) காஞ்சிபுரம் (D) வைத்தீசுவரன் கோயில்

41. அருச்சுனனுக்குப் பாசுபதம் தந்தருளிய தலம் எது?

(A) திருமறைக்காடு (B) திருவரங்கம்

(C) திருச்சீரலைவாய் (D) திருவேட்களம்

42. செட்டிப் பெண்ணுக்கு இறைவன் சாட்சி சொன்ன தலம் எது?

(A) திருப்புறம்பயம் (B) மயிலாப்பூர்

(C) மதுரை (D) திருக்கழுக்குன்றம்

43. ஜடாயுவின் அண்ணன் யார்?

(A) வச்சிரபாகு (B) வீரபாகு (C) சம்பாதி (D) பிரத்யும்நன்

44. முகுந்தமாலை யாரால் இயற்றப்பட்டது?

(A) குலசேகர ஆழ்வார் (B) நம்மாழ்வார்

(C) பெரியாழ்வார் (D) ஆண்டாள்

45. கிருஷ்ணரின் சங்கின் பெயர் யாது?

(A) காண்டீபம் (B) சாரங்கம் (C) பாஞ்சசன்யம் (D) திருமழிசை

46. ஏரி காத்த இராமர் கோயில் எங்குள்ளது?

(A) திருக்கோட்டியூர் (B) மதுராந்தகம்

(C) திருவைகுண்டம் (D) திருவரங்கம்

47. வைணவத்தில் பெரிய கோயில் என்றால் எக்கோயிலைக் குறிக்கும்?

(A) சோளிங்கர் கோயில் (B) திருப்பதி கோயில்

(C) ஸ்ரீரங்கநாதர் கோயில் (D) பொற்கோயில்

48. விசிஷ்டாத்வைதத்தைப் போதித்த ஆசார்யர் யார்?

(A) மெய்கண்டார் (B) நாதமுனிகள் (C) புரந்தரதாசர் (D) இராமானுஜர்

49. ஹைகூ இலக்கிய வகையோடு தொடர்புடைய நாடு
(A) இந்தியா (B) இலங்கை (C) ஜப்பான் (D) மலேசியா

50. தலித்திய விமர்சகர்களுள் குறிப்பிடத்தக்கவர்
(A) கா.சிவத்தம்பி (B) ராஜ்கௌதமன் (C) சுந்தரராமசாமி (D) எவருமிலர்

51. தமிழில் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தோடு தொடர்புடைய நாடு
(A) இலங்கை (B) அல்ஜீரியா (C) லிபியா (D) எதுவுமன்று

52. பின் நவீனத்துவப் படைப்பாளியாகக் கருதத் தக்கவர்
(A) தமிழவன் (B) கல்கி (C) ஜெயகாந்தன் (D) எவருமில்லை

53. மார்க்சியச் சார்புடைய இதழ்
(A) காலச்சுவடு (B) தாமரை (C) கணையாழி (D) தீராநதி

54. ஜனரஞ்சக இதழை நடத்திவரும் தனியார் நிறுவனம் நடத்தும் இலக்கியச் சிற்றிதழ்
(A) நிகழ் (B) பன்முகம் (C) தீராநதி (D) எதுவுமன்று

55. கண்ணப்பன் கிளிகள் என்னும் கவிதைத் தொகுப்பு நூலை எழுதியவர்
(A) பாரதிதாசன் (B) நா.காமராசன் (C) தமிழ் ஒளி (D) முடியரசன்

56. மணிக்கொடி எழுத்தாளர்களில் ஒருவர்
(A) ஜெயகாந்தன் (B) சுஜாதா
(C) கு.ப.ராஜகோபாலன் (D) ரகுநாதன்

57. இலக்கிய இயக்கங்களுள் குறிப்பிடத்தக்கது.
(A) விடுதலை இயக்கம் (B) பக்தி இயக்கம்
(C) குறியீட்டியம் (D) எதுவுமன்று

58. பின் நவீனத்துவச் சிந்தனை முதன்மை கொடுப்பது
(A) ஆசிரியர் (B) வாசகர் (C) கோட்பாடு (D) எதுவுமன்று

59. 'சோழநிலா' என்னும் நாவலை எழுதியவர்
(A) மு.மேத்தா (B) சாண்டில்யன்
(C) ஜெயகாந்தன் (D) புஷ்பாதங்கதுரை

60. 'தலைமுறைகள்' என்னும் நாவலை எழுதியவர்
(A) இந்திரா பார்த்தசாரதி (B) ராஜம் கிருஷ்ணன்
(C) திலகவதி (D) நீலபத்மநாபன்

61. 'தோணி வருகிறது' என்னும் படைப்பின் ஆசிரியர்
(A) ஈரோடுதமிழன்பன் (B) கண்ணதாசன்
(C) வைரமுத்து (D) அப்துல்ரஹ்மான்

62. உ ஊஆகிய எழுத்துக்கள்

(A) இருமொழிக் குரித்து

(B) ஒருமொழிக் குரித்து

(C) ந வாவொடு நவிலாது

(D) எதுவுமில்லை

63. நீட வருதல்

(A) கட்டுரைக்கு உரியது

(B) செய்யுட்கு உரியது

(C) பாவிற்கு உரியது

(D) எதுவுமில்லை

64. கோதை வந்தாள்

(A) ஒருமை சுட்டிய பெயர்

(B) பன்மை சுட்டிய பெயர்

(C) பெண்மை சுட்டிய பெயர்

(D) எதுவுமில்லை

65. 'செய்கு' என்னு வினைமுற்று பெரும்பாலும்

(A) பெயர் கொண்டு முடியும்

(B) வினை கொண்டு முடியும்

(C) இடை கொண்டு முடியும்

(D) எதுவுமில்லை

66. 'உண்டாட்டு' என்பது

(A) காஞ்சித் திணையில் வருவது

(B) வாகைத் திணையில் வருவது

(C) உழிஞைத் திணையில் வருவது

(D) எதிலும் வராது

67. 'வரைவு' என்பது

(A) மணம் (B) களவு (C) பிரிவு (D) எதுவுமில்லை

68. 'நளிய' என்பது

(A) வேற்றுமையுருபு

(B) உவமையுருபு

(C) பண்புருபு

(D) எதுவுமில்லை

69. 'வருத்தம்' என்பது

(A) செய்யுள் உறுப்பு

(B) உவமை உருபு

(C) மெய்ப்பாடு

(D) எதுவுமில்லை

70. ‘நெடுவெண்பாட்டு’ என்பது

(A) கலிப்பாவின் வகைகளில் ஒன்று

(B) ஆசிரியப்பாவின் வகைகளில் ஒன்று

(C) பரிபாடலின் வகைகளில் ஒன்று

(D) எதுவுமில்லை

71. ‘குருளை’ என்பது

(A) இளமைப் பெயர்

(B) ஆண்பாற் பெயர்

(C) பெண்பாற் பெயர்

(D) எதுவுமில்லை

72. ‘காதல்’ என்பது

(A) பெயர்ச்சொல்

(B) வினைச்சொல்

(C) இடைச்சொல்

(D) எதுவுமில்லை

73. பிச்சியார், இடைச்சியார் ஆகிய பகுதிகள் இடம்பெறும் சிற்றிலக்கியம்

(A) கலம்பகம்

(B) சதகம்

(C) குற்றாலக் குறவஞ்சி

(D) முக்கூடற்பள்ளு

74. அதியமான் ———————— ஔவையை தூதாக அனுப்பினான்

(A) குலோத்துங்க சோழனிடம்

(B) நரசிம்ம பல்லவனிடம்

(C) கோப்பெருஞ்சோழனிடம்

(D) தொண்டைமானிடம்

75. சிலப்பதிகார புகார் காண்டத்திற்கு மட்டும் உரை எழுதியவர்

(A) உ.வே.சா.

(B) பெ.வே.சோ

(C) ஆர்.கே. சண்முகம் செட்டியார்

(D) ந.மு. வேங்கடசாமி நாட்டார்

76. ‘சாதுவன்’ எனும் பாத்திரம் இடம்பெறும் காப்பியம்

(A) சிலப்பதிகாரம்

(B) மணிமேகலை

(C) சீவகசிந்தாமணி

(D) வளையாபதி

77. ‘குணவாயிற்கோட்டம்’ என்பதன் பொருள்

(A) முருகன் கோயில்

(B) திருமால் கோயில்

(C) அருகன் கோயில்

(D) கண்ணகி கோயில்

78. ‘பரிச்சேதம்’ எனும் காப்பிய உறுப்பு இடம்பெறும் காப்பியம்

(A) உதயண குமார காவியம் (B) சீவகசிந்தாமணி

(C) களாமணி (D) எதுவுமில்லை

79. ‘ஐம்பெருங்காப்பியம்’ என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர்

(A) மயிலை நாதர் (B) சி.வை.தா.

(C) உ.வே.சா. (D) கம்பர்

80. சீவகனை வளர்த்து வந்தவர்

(A) சச்சந்தன் (B) கந்துக்கடன்

(C) பதுமன் (D) எவருமில்லை

81. குண்டலகேசியின் இயற்பெயர்

(A) தீவதிலகை (B) விசாகை

(C) பத்திரை (D) சுமித்திரை

82. கம்பர் எந்தக் காப்பியத்திலிருந்து ஓர் அகப்பை முகந்து கொண்டார்

(A) பெரிய புராணம் (B) சீவகசிந்தாமணி

(C) சிலப்பதிகாரம் (D) எதுவுமில்லை

83. சூளாமணியில் இடம்பெற்றுள்ள மொத்தச் சருக்கங்கள்

(A) 30 (B) 12 (C) 15 (D) 03

84. பௌத்த துறவியிடம் வாதம் செய்து வென்றவள்

(A) மணிமேகலை (B) நீலகேசி

(C) குண்டலகேசி (D) மாதவி

85. அகவற்பாவால் அமைந்த காப்பியம்

(A) சீவக சிந்தாமணி (B) கம்பராமாயணம்

(C) பெருங்கதை (D) எதுவுமில்லை

86. யசோதர காவியத்தின் ஆசிரியர்

(A) வெண்ணாவலுடையார்
(B) தோலாமொழித் தேவர்
(C) வர்த்தமான தேவர்
(D) புட்ப தத்தர்

87. பெரிய புராணம் அரங்கேற்றப்பட்ட இடம்

(A) திருவரங்கம்
(B) மயிலை
(C) கயிலை
(D) தில்லை

88. 'அழகு உண்மை; உண்மையே அழகு' என்பதை முன்மொழிந்தவர்

(A) வில்லியம் வோர்ட்ஸ்வர்த்
(B) ஜான் கீட்ஸ்
(C) பைரன்
(D) டி.எஸ். எலியட்

89. 'விசாரணை' என்னும் நாவலின் ஆசிரியர்

(A) காம்யூ
(B) ஜீன் பால் சார்த்தர்
(C) ப்ரான்ஸ் காஃப்கா
(D) எர்னெஸ்ட் ஹெமிங்வே

90. அமெரிக்க இலக்கியத்தின் மிகச் சிறந்த இலக்கியவாதி

(A) அன்னா அக்மதோவா
(B) வோல்லே சொயின்கா
(C) எமிலி டிக்கின்சன்
(D) துர்கனேவ்

91. 'பாழ்நிலம்' என்னும் படைப்பின் ஆசிரியர்

(A) எஸ்ரா பவுண்ட்
(B) டி.எஸ். எலியட்
(C) எர்னஸ்ட் ஹெமிங்வே
(D) மாப்பசான்

92. 'நீங்கள் பலர் அவர்கள் சிலர்' என்று எழுதியவர்

(A) கார்ல் மார்க்ஸ்
(B) மாவோ
(C) ஷெல்லி
(D) பைரன்

93. 'உங்கள் குண்டுகள் துளைத்த ஒவ்வொரு துளையிலிருந்தும் ஸ்பெயின் எழுகிறது' - இப்புகழ் பெற்ற கவிதையை எழுதியவர்

(A) ஹோசிமின்
(B) செங்கோர்
(C) பாப்லோ நெரூடா
(D) ரசூல் கம்ஸ்தோவ்

94. ‘நிரபராதிகளின் காலம்’ என்னும் நாடகத்தின் ஆசிரியர்

(A) சாமுவேல் பெக்கட் (B) ஹெரால்ட் பின்ட்டர்

(C) ஸீக் ஃபிரிட் லென்ஸ் (D) சார்த்தர்

95. ‘புத்துயிர்ப்பு’ என்னும் நாவலின் ஆசிரியர்

(A) லியோ டால்ஸ்டாய் (B) தாஸ்தாய்வ்ஸ்கி

(C) மக்ஸிம் கார்க்கி (D) இவான் துர்கனேவ்

96. ‘கடலும் கிழவனும்’ என்னும் நாவலின் ஆசிரியர்

(A) எர்னெஸ்ட் ஹெமிங்வே (B) விர்ஜினியா வுல்ஃப்

(C) அயன் ராண்ட் (D) இக்பால்

97. ஆப்பிரிக்க இலக்கியத்தின் முன்னோடி

(A) ஹோசிமின் (B) இக்பால்

(C) வோல்லே சொயின்கா (D) அய்க்கியூங்

98. ‘புல்லின் இதழ்கள்’ முதற்பதிப்பு வெளிவந்த ஆண்டு

(A) 1845 (B) 1855 (C) 1865 (D) 1866

99. ‘தீர்க்கதரிசி’ என்னும் நூலின் ஆசிரியர்

(A) ஜே. கிருஷ்ணமூர்த்தி (B) ஓஷோ

(C) கலீல் ஜிப்ரான் (D) ஹோசிமின்

100. ‘வாழ்வின் மேல் மோகம்’ என்னும் நாவலின் ஆசிரியர்

(A) வான்கா (B) மைக்கலேஞ்சலோ

(C) இர்விங் ஸ்டோன் (D) தாமஸ் ஹார்டி

---